## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 15, 2017

**1. 2018 அரசாங்கத்தின் காமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டை (Commonwealth Heads of Government Meeting (CHOGM)) எந்த நாடு நடத்துகிறது?**

A. அமெரிக்கா
B. ஐக்கிய ராஜ்ஜியம்
C. ஜெர்மனி
D. பிரான்ஸ்

**விடை: B. ஐக்கிய ராஜ்ஜியம்**

ஐக்கிய ராஜ்யம் (இங்கிலாந்து), 20 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு அரசாங்கத்தின் காமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டின் (Commonwealth Heads of Government Meeting (CHOGM)) 25-வது பதிப்பை ஏப்ரல் 2018 இல் நடத்தவுள்ளது. காமன்வெல்த் உச்சி மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மற்றும் 2018 உச்சி மாநாட்டில், காமன்வெல்த் தலைவர் பதவியானது மால்ட்டாவின் பிரதமரிடம் இருந்து ஐக்கிய ராஜ்யத்தின் பிரதமருக்கு மாற்றப்படும், 2020 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் 26-வது CHOGM வரை ஐக்கிய ராஜ்ய பிரதமர் இப்பதவி வகிப்பார்.

**2. 2017 உலக நுகர்வோர் உரிமை தினத்தின் (WCRD) மையக்கரு என்ன ?**

A. Antibiotics off the menu
B. Fix our phone rights
C. Building a digital world consumers can trust
D. Consumer Justice Now!

**விடை: C. Building a digital world consumers can trust**

அனைத்து நுகர்வோரின் அடிப்படை உரிமைகளை ஊக்குவிக்க, அந்த உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கோரி, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15-ஆம் தேதி உலக நுகர்வோர் உரிமை தினம் (WCRD) அனுசரிக்கப்படுகிறது. இது, சந்தை மீறல்கள் மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிராக போராட மக்களுக்கு ஒரு வாய்ப்பை கொடுக்கிறது. 2017

ஆம் ஆண்டிற்கான மையக்கரு 'Building a Digital World Consumers can Trust'. இந்தியாவில் WCRD தவிர, தேசிய நுகர்வோர் தினத்தை (NCD) டிசம்பர் 24-ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் கடைபிடிக்கிறோம்.

**3. எந்த குழு, எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த இந்தியா அரசிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது ?**

A. முகமது பஷீர் குழு
B. ஜே ஜே டி நட்டர்ஜி குழு
C. எச் ஆர் நாகேந்திர குழு
D. மதுகர் குப்தா குழு

**விடை: D. மதுகர் குப்தா குழு**

மதுகர் குப்தா தலைமையில் அமைக்கப்பட்ட குழு, இந்தியா-பாகிஸ்தான் எல்லையுடன் சேர்த்து அதன் வேலியில் எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தனது அறிக்கையை இந்திய அரசிடம் சமர்ப்பித்துள்ளது. அச்சுறுத்தல்கள் மற்றும் எல்லைப் பாதுகாப்பு, படை நிலை மதிப்பீடு, எல்லையில் பயன்படுத்துதல், எல்லையை பாதுகாப்பதில் உள்ள உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகள் மற்றும் நிர்வாக சிக்கல்கள் ஆகிய பிரச்சனைகள் குறித்து பரந்த அளவில் அதன் பரிந்துரைகளை இக்குழு கொடுத்திருக்கிறது. அது பங்குதாரர்களின் ஆலோசனையுடன் குழுவின் பரிந்துரைகள் மீது வெளிச்சத்தில் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 14, 2017 அன்று மக்களவையில் J.J.T. நட்டேர்ஜி மற்றும் ஈ.டி முகமது பஷீர் கேட்ட கேள்விக்கு எழுத்துபூர்வ பதிலாக இந்த தகவலை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

**4. எந்த நகரம், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் (Occupational Safety and Health - OSH) பற்றிய சர்வதேச விஷன் ஜீரோ மாநாட்டை நடத்துகிறது ?**

A. புது தில்லி
B. சென்னை
C. புனே
D. கொல்கத்தா

**விடை: A. புது தில்லி**

"விஷன் ஜீரோ" மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சர்வதேச மாநாடு மார்ச் 15-ஆம் தேதி புது தில்லியில் தொடங்கியது மற்றும் மார்ச் 17 வரை மாநாடு தொடரும். வேலையிடத்தில் அறிவு, நடைமுறைகள் மற்றும் அனுபவத்தை பரிமாறிவதன் மூலம் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு மன்றத்தை இம்மாநாடு வழங்கும். இந்த மாநாட்டின்போது, தனிநபர் காப்புக் கருவிகள்(PPEs) மற்றும் தொழில்சார் சுகாதார ஊக்குவிப்பு (OGP) ஆகியவற்றில் உள்ள புதிய போக்குகளை வெளிக்காட்ட "OSH - INOSH EXPO 2017" கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்படும். 3 நாள் மாநாட்டை சர்வதேச சமூக பாதுகாப்பு சங்கத்துடன்(ISSA) இணைந்து பொது இயக்குனரகம் தொழிற்சாலை அறிவுரை மற்றும் தொழிலாளர் நிறுவனங்கள்(DGFASLI), இந்திய அரசு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், ஜெர்மன் சமூக விபத்து காப்பீடு (DGUV), ஜெர்மனி ஆகியவை ஏற்பாடு செய்தது.

**5. "When Breath Becomes Air" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. சித்தார்த்த முகர்ஜி
B. அதுல் கவான்டே
C. பால் கலாநிதி
D. நிருபம் ராய்

**விடை: C. பால் கலாநிதி**

"When Breath Becomes Air" என்ற புத்தகத்தை இந்திய-அமெரிக்க எழுத்தாளர் டாக்டர் பால் கலாநிதி எழுதியுள்ளார். கலாநிதி, மாணவனாக இருந்து பின்பு நரம்பியல் நிபுணர், நோயாளி மற்றும் இந்த புத்தகத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் போது புற்றுநோயால் இறந்தபொழுது தந்தை என அவரது பரிமாற்றத்தை காலவரிசையில் நினைவு கூறும் வரலாறாக இந்த புத்தகம் உள்ளது. சமீபத்திய செய்திகளில் இது வரக்காரணம், 2017 Wellcome Book பரிசிற்கு இந்த புத்தகம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இறந்தபின்பு வெளியிடப்பட்ட புத்தகத்தின் பெயர், Wellcome Book பரிசு போட்டியில் பங்குபெறுவது இதுவே முதன்முறையாகும். சுகாதாரம் மற்றும் மருத்துவ

தலைப்புகள் தொடர்புடைய அறிவியல் மற்றும் புனைவல்லாத படைப்புக்களை இவ்விருது கொண்டாடுகிறது. இது தவிர, இந்திய-அமெரிக்க எழுத்தாளர் சித்தார்த்த முகர்ஜி, மரபியல் மற்றும் மன ஆரோக்கியம் குறித்த தனது ஆய்வு நூலான "The Gene: An Intimate History" புத்தகத்திற்காக இந்த ஆண்டு பரிசின் போட்டியாளர் பட்டியலில் உள்ளார். 2017 ஏப்ரலில் நடைபெறவிருக்கும் வெல்கம் சேகரிப்பு விழாவில் வெற்றியாளர் பெயர் அறிவிக்கப்படும்.

**6. எந்த மாநில அரசு, பெண்கள் பாதுகாப்புக்காக "Ammavin Aran" எனும் பயன்பாட்டை அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது ?**

A. ஆந்திரப் பிரதேசம்
B. தமிழ்நாடு
C. கேரளா
D. கர்நாடகா

**விடை: B. தமிழ்நாடு**

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் IT குழு, பெண்கள் பாதுகாப்புக்காக 'Ammavin Aran' எனும் முதல்-வகையான பயன்பாட்டை தமிழ்நாட்டில் தொடங்கியுள்ளது. இந்த பயன்பாடு, அருகில் உள்ள காவல் நிலையம் மற்றும் மருத்துவமனை பற்றிய விவரங்களை வரைபடம் மற்றும் தொலைபேசி எண்ணுடன் பயனர்களுக்கு அளிக்கும். ஆபத்தில் இருக்கும் ஒருவர் இதில் உள்ள விசில் பொத்தானை அழுத்தும் போது போனின் ஸ்பிக்கரை பயன்படுத்தி உரத்த சத்ததை இது உருவாக்கும்.இந்த பயன்பாட்டில் அழைப்புகளை ரெகார்ட் செய்யும் வசதியும், உயிர்காக்கும் தகவல்களை வழங்க 'குறிப்புகள்' ஐகானும் உள் சேர்க்கப்பட்டுள்ளது. 'Ammavin Aran' என்பதன் பொருள் 'தாயின் கோட்டை' என்பதாகும். தற்போது, அதிமுக கட்சி தமிழ்நாட்டில் அதிகாரத்தில் உள்ளது, இந்திய பாராளுமன்றத்தில் இது மூன்றாவது பெரிய கட்சியாகும்.

**7. எந்த மாநில அரசு, தொழில் முனையும் பெண்களுக்காக Idea2POC எனும் நிதியை தொடங்கியுள்ளது ?**

A. அசாம்

B. மத்தியப் பிரதேசம்
C. ராஜஸ்தான்
D. கர்நாடகா

**விடை: D. கர்நாடகா**

கர்நாடக அரசு, தொழில் முனையும் பெண்களுக்காக ரூ .10 கோடி Idea2POC (Idea to Proof of Concept) நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது. நிதியின் கீழ், கருத்து ஆதார சரிபார்த்தல், சான்றிதழ் மற்றும் பைலட் சாதன செலவுகளை ஈடுகட்டுதல் போன்ற இன்னபிற செலவுகளுக்கு நிதியை எதிர்பார்க்கும் புதுமையான பெண்களுக்கு ரூ.50 லட்சம் வரை தகவல் தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் & தொழில்நுட்பத் துறை போன்ற துறைகள் ஒப்புதல் தர முடியும். கர்நாடகாவின் பல்துறை ஸ்டார்ட்அப் கொள்கையின் கீழ்,IT, BT மற்றும் S&T துறைகள் மூலம் பெண் தொழில் முனைவோருக்கு இந்த புதிய நிதி அமைக்கப்பட்டது. இது தவிர, கர்நாடகா அரசு ஏற்கனவே மூன்று Idea2POC நிதியை தொடங்கியுள்ளது. அனைத்து தொழில்நுட்பத் துறைக்கு (ரூ .10 கோடி) ஒன்றும், விவசாயத்தில் (ரூ 2.5 கோடி) கவனம் செலுத்தும் வகையில் ஒன்றும், மற்றொன்று சுற்றுலாவில் கவனம் (ரூ 2.5 கோடி) செலுத்தவும் அமைக்கப்பட்டுள்ளது.

**8. புகழ்பெற்ற எழுத்தாளர் எமி க்ரௌஸ் ரோசென்தால் (Amy Krouse Rosenthal) சமீபத்தில் மறைந்தார். அவர் எந்த நாட்டை சேர்ந்தவர் ?**

A. அமெரிக்கா
B. பிரேசில்
C. தென் ஆப்ரிக்கா
D. இந்தோனேஷியா

**விடை: A. அமெரிக்கா**

பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் ஆகிய இருவருக்குமான புத்தகங்களை எழுதும் படைப்பாற்றல் மிக்க அமெரிக்க எழுத்தாளர் எமி க்ரௌஸ் ரோசென்தால், சமீபத்தில் அமெரிக்காவின் சிகாகோவில் காலமானார். “Encyclopedia of an Ordinary Life” மற்றும் அவரது குழந்தைகளின் படம் புத்தகங்கள் மற்றும் திரைப்பட திட்டமான “The Beckoning of Lovely” என்ற

அவரது சிறந்த சித்தரிப்புகள் மூலம் நன்கு அறியப்படுகிறார். Best Children's Books for Family Literacy பட்டியலில் ஒரே ஆண்டில் மூன்று குழந்தைகள் புத்தகங்களை கொண்டுள்ள ஒரே எழுத்தாளர் இவர் தான். இவர் Chicago's NPR affiliate WBEZ மற்றும் TED மாநாட்டின் பங்களிப்பாளராக உள்ளார்.

**9. எந்த மாநில அரசு, சமீபத்தில் கிராமப்புற ஏழைகளுக்கு "ஆதர்ஷ் கிராம் யோஜனா" ஒன்றை முன்னெடுத்துள்ளது ?**

A. சிக்கிம்
B. இமாசலப் பிரதேசம்
C. அருணாசலப் பிரதேசம்
D. அசாம்

**விடை: C. அருணாசலப் பிரதேசம்**

அருணாச்சல பிரதேச அரசு, கிராமப்புற ஏழைகளுக்கு "ஆதர்ஷ் கிராம் யோஜனா" என்ற புதிய திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. திட்டத்தின் நோக்கம், ஏழை மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றும் நோக்கில் மாநில கிராமப்புற பகுதிகளில் உள்ள அவர்களை சென்றடைதல் ஆகும். இத்திட்டத்தின் கீழ், 123 கிராமங்கள் (வட்டம் ஒன்றுக்கு ஒரு கிராமத்தை உள்ளடக்கிய) 2017-18 நிதியாண்டில் 'மாதிரி கிராமங்கள்' ஆக அபிவிருத்தி செய்யப்படும். மாநில அரசின் 2017-18 பட்ஜெட்டில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அந்த கிராமத்து மக்களுக்கு சமூக சொத்துக்களை உருவாக்குதல் ஆகியவற்றுக்காக ரூ.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. இந்தியாவின் மிகப் பெரிய மிதக்கும் சூரிய ஃபோட்டோவோல்டியாக் (Photo-Voltaic Plant) ஆலை, எந்த மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளது ?**

A. அரியானா
B. ஜம்மு காஷ்மீர்
C. மகாராஷ்டிரா
D. கேரளா

**விடை: D. கேரளா**

தேசிய அனல் மின் கார்ப்பரேஷன் லிமிடெட்(NTPC) நிறுவனம் சமீபத்தில், இந்தியாவின் மிகப் பெரிய மிதக்கும் சூரிய ஃபோட்டோவோல்டியாக் (Photo-Voltaic) ஆலையை கேரளாவின் காயம்குளம் மாவட்டத்தில் உள்ள ராஜீவ் காந்தி கூட்டு சுழல் ஆற்றல் ஆலையில் (RGCCPP) நிறுவியுள்ளது. NTPC Energy Technology Research Alliance (NETRA) நிறுவனம், இந்த 100 kWp (கிலோவாட் உச்ச) மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை உள்நாட்டிலேயே Central Institute of Plastic Engineering & Technology (CIPET), Chennai நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளது. NETRA மற்றும் காயம்குளம் NTPC நிலையத்தின் ஆதரவுடன் குறுகிய காலத்தில் அதாவது 22 நாட்களில் இந்த அமைப்பை Swelect Energy Systems Ltd, Chennai நிறுவனம் நிறுவியுள்ளது. ஆவியாதலை குறைப்பதன் மூலம் தண்ணீரை பாதுகாப்பது, பேனல்களின் மீதான குளிர்ச்சி விளைவு மூலம் அதிகரிக்கப்பட்ட உற்பத்தி, குறைக்கப்பட்ட நிறுவல் நேரம் மற்றும் உப்பு நீர் சுற்றுச் சூழலிலும் நிறுவ முடியும் என்பது போன்ற பல்வேறு நன்மைகளை இந்த சூரிய PV ஆலை கொண்டுள்ளது.